**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C. No. 250/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-5, L.W-5 |
| Name | : Subramanian | Defence | : |
| Father Name | : Rajamanikkam | Court | : |
| Village | :Annanperumal Koil | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | :56/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 17.06.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது அண்ணன் பெருமாள் கோயில் தெற்கு தெருவில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் அ.சா. 1 மற்றும் அ.சா. 2 யை தெரியும். எதிரி பிரபாகரனை தெரியும். சுமார் 1 வருடத்திற்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை. எதிரியின் வீட்டிற்கு மின்சாரம்நின்றது தொடர்பாக அ.சா. 1ன் வீட்டில் இருந்த பாக்குமரத்தை வெட்டியது சம்பந்தமாக அ.சா. 1 எதிரியிடம் கேட்டதற்கு , எதிரி அ.சா. 1யை கையில் வைத்திருந்த மரம் வெட்டி அரிவாளால் அ.சா.1ன் கழுத்தில் வைத்து அழுத்தியுள்ளார். அதை அ.சா. 1 தடுக்கவே அவரது இரு கைளிலும் உள்ள கைவிரல்களில் இடையே இரத்த காயம் ஏற்பட்டது. நான் அண்ணன் பெருமாள் கோயில் ஊரில் நாட்டாண்மையாக உள்ளதால் விஷயம் தெரிந்து எதிரியை கண்டித்தேன். மேற்படி சம்பவம் சம்பந்தமாக அ.சா. 1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலும், தடயம் கைப்பற்றுதல் மகசரிலும் உள்ள முதலாவது உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். எதிரிக்கும், அ.சா.1க்கும் மீண்டும் பிரச்சினை ஏற்படக்கூடாது என்று சமாதான பேசியதற்கு சாட்சியாக போட்டேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ 2 மற்றும் கைப்பற்றுதல் மகசரில்**

**உள்ள 1-வது சாட்சி கையொப்பம் அ.சா. ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சி விமலாவை தெரியும். எதிரியை போலிசார் கைது செய்த பின்னர் வழக்கு சம்பவத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். போலிசாரிடம் எதிரி பாக்குமரத்தை வெட்டிய அரிவாளால் அ.சா. 1 ன் கழுத்தில் வைத்து அழுத்தியதை ஒப்புக்கொண்டு மேற்படி அரிவாளை போலிசாரிடம் ஒப்படைத்துள்ளார் என்றால் சரிதான். போலிசார் எதிரியிடம் அரிவாளை கைப்பற்றியதற்கு சாட்சியாக கைப்பற்றுதல் மகசரில் நான் சாட்சி கையொப்பம்போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி போலிசாரிடம் 08.07.2021 அன்று 15 மணிக்கு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் சாட்சியாக நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் இல்லை என்பதால் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.